**ஹோமியோபதி வைத்திய சபை - 2020**

---

## 1.1 அபிப்பிராயம்

ஹோமியோபதி வைத்திய சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வைத்திய சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வைத்திய சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வைத்திய சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வைத்திய சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது

கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வைத்திய சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வைத்திய சபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- வைத்திய சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வைத்திய சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் 5(1) ஆம் பந்தி | உத்தியோகத்தர் ஒருவரின் சேவை முடிவடைந்த தினத்திலிருந்து முப்பது நாட்களுக்குள் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டிய போதிலும், 2020 மே 15 ஆந் திகதி சேவையிலிருந்து விலகிய மருந்து ஒருங்கிணைப்பாளராக 5 வருடங்கள் சேவையாற்றிய உத்தியோகத்தருக்கு | மருந்து ஒருங்கிணைப்பாளர் விலகிய காலத்தில் மருத்துவச் சபையொன்று இல்லாமை மற்றும் புதிய மருத்துவச் சபையின் கீழ் இப்பணிக்கொடை விரைவில் செலுத்தப்பட்டு முடிப்பதற்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2020 திசெம்பர் 31 வரையில் ரூபா 77,205 ஆன பணிக்கொடை செலுத்தப்படவில்லை. | | |
| (ஆ) | 2016 இன் 10 ஆம் இலக்க ஹோதியோபதி அதிகாரச்சட்டத்தின் | | | |
| (i) | 28(6) உப பிரிவு | ஹோமியோபதி மருத்துவ துறையில் உள்ளவர்களை பதிவு செய்வதற்காக மருத்துவ சபையினால் நடாத்திச் செல்லப்படும் பதிவேடு, பதிவினை புதுப்பிக்கும் கட்டணங்கள் செலுத்திய மருத்துவர்கள் மற்றும் செலுத்தாத மருத்துவர்கள் ஆகியோரை தனித்தனியாக இனங்காண்பதற்கு இயலுமான வகையில் மற்றும் நிலுவை கட்டணத்தை இனங்காணக் கூடிய வகையில் நாளது வரையாக பேணப்பட்டிருக்க வில்லை. | மருத்துவர்களின் பதவினை நாளதுவரையாக்கு வதற்காக செலுத்திய கட்டணங்களை உள்ளடக்கிய பதிவேடொன்றை பேணுவதற்கு உத்தியோகத்தர் களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | ஹோமியோபதி மருத்துவ துறையில் உள்ளவர்களை பதிவு செய்வதற்கான பதிவேடொன்று மற்றும் பதிவைப் புதுப்பித்தவர்கள் மற்றும் புதுப்பிக்காதவர்களை இனங்காணக்கூடிய வகையில் நாளதுவரையாக்கப்பட் டுப் பேணப்பட வேண்டும். |
| (ii) | 30 ஆம் பிரிவு | ஹோமியோபதி மருத்துவ துறையில் பதிவு செய்வதற்காக பரீட்சையொன்று நடாத்தப்பட வேண்டிய போதிலும், பரீட்சையை நடாத்துவதற்காக சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை வழங்குதல் முடிக்கப்படாத காரணத்தினால் 2018 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்ட பரீட்சையானது 2021 யூன் 30 வரையில் நடாத்தப்படாமையால் மருத்துவத் துறையில் பதிவு செய்தலானது தாமதமாகி இருந்தது. | சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டு முடிவடைந்ததுடன் மற்றும் பிரமாணங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் பரீட்சை நடாத்தப்பட்டு பதிவுகளை வழங்குவதற்கு முடியும். | சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை வழங்குவதற்கு விரைவுபடுத்தப்படுவ துடன் தாமதமின்றி மருத்துவத் துறையில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 31(1) உப பிரிவு | ஹோதியோபதி மருந்து கலப்பவர்களை பதிவு செய்வதற்கான ஒரு ஹோமியோபதி மருந்து கலப்பவர்களுக்கான பதிவேடொன்றைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இந்த ஏற்பாடு செய்யப்படுவதற்காக பிரமாணங்கள் தயாரிக்கப்படாமையால் 2020 திசெம்பர் 31 வரையில் அவ்வாறான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பிரமாணங்களை வகுப்பதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ள துடன் பிரமாணங்களை வகுத்தலானது விரைவில் மேற்கொள்ளப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வும் மற்றும் மருந்து கலப்பவர்களின் பதிவுகள் மிக விரைவில் மேற்கொள்ளப்படு வதற்கும் எதிர்பார்க்கப் படுகின்றது. | பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டு சட்டத்தின் ஏற்பாடுகள் செயற்படுத்தப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 133 | சபைக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்படாமையுடன் சுகாதார அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வில்லை. | அமைச்சுடன் இணைந்து உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளதாக மற்றும் தற்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்று நிறுவப்பட்டிருப்பதால் அது விரைவில் கூட்டப்பட்டு இந்நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படு வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 751 | நிறுவனத்திற்குக் கிடைக்கின்ற சகல பொருட்களும் உடனடியாக பொருட்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் | 2018 ஆம் வருடமானது மருத்துவ சபையொன்று இல்லாமல் கடந்து விட்ட வருடமாகவும் அவற்றை | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 644,634 மற்றும் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 885,892 ஆன பொருட்கள் பொது மற்றும் அறுவைச் சிகிட்சைப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | உள்ளடக்குவதற்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் மீளாய்வாண்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் காரணமாக பதிவேட்டை நாளதுவரையாக்கல் தாமதமாகியதாகவும் 2020 செப்டம்பர் மாதமளவில் புதிய மருத்துவச் சபை நிறுவப்பட்டதன் பின்னர் இருப்புப் பதிவேடு நாளதுவரையாக்கப் படுவதற்கும் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. | |
| (iii) | நிதிப்பிரமாணம் 754 | ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் இருப்புப் பதிவேட்டை சமப்படுத்த வேண்டிய போதிலும் 2019 ஆம் வருடத்திலிருந்து பொதுவான பொருட் பதிவேடு மற்றும் அறுவைச் சிகிட்சைப் பதிவேடு என்பன சமப்படுத்தப்பட்டிருக்க வில்லை | நாட்டில் நிலவிய கொவிட் சூழ்நிலை காரணமாக நாடு மூடப்பட்டிருந்ததால் பொருட் பதிவேடு சமப்படுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்ததாகவும் மற்றும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு பொதுப் பொருட் பதிவேடு மற்றும் அறுவைச் சிகிட்சைப் பொருட்கள் பதிவேடு என்பவற்றை விரைவில் சமப்படுத்துவதற்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | நிதிப்பிரமாணம் 756 | நிறுவனத்தில் பொருட்கள் தொடர்பான வருடாந்தக் கணிப்பீடொன்று மேற்கொள்வதற்காக கணிப்பீட்டுச் சபை நியமிக்கப்பட்டு பொருட் கணிப்பீடு நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் வருடத்திலிருந்து மீளாய்வாண்டு வரையில் பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வில்லை. | பொருட் கணிப்பீட்டிற்குத் தேவையான நடவடிக்கைகள் மிக விரைவில் மேற்கொள்ளப்படுவதற்கு அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஈ) | தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயம் 16.1 ஆம் பந்தி | வினைத்திறமைகாண் தடைப் பதவி உயர்வுப் பரீட்சை குறிப்பிட்ட தினத்தில் நடாத்தப்படுவதற்கு நிறுவனத் தலைவர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் 2012, 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ஆட்சேர்க்கப்பட்டிருந்த 04 பதவிகளுக்கான அதிகாரிகள் 20 பேருக்காக கணக்காய்வுத் தினமாகிய 2021 யூன் 30 வரையில் வினைத் திறமை காண் தடைப் பரீட்சை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இதனால் இந்த உத்தியோகத்தர்களை சேவையில் நிரந்தரமாக்க முடியாமலிருந்ததுடன் அவர்களது தகுதி காண் காலத்தினையும் நீடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வினைத்திறமை காண் தடைப் பரீட்சையை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. | இப் பரீட்சையை நடாத்துதல் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவ்வாறான உத்தியோகத்தர்களின் தகுதிகாண் காலத்தை நீடிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2018 நவம்பர் 14 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் அரச வங்கிகளில் பேணப்படுகின்ற கணக்கில் பணத்தை வைப்புச் செய்ய வேண்டியிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட ரூபா 1,204,500 ஆன கற்கை நெறிக் கட்டணங்கள் தனிப்பட்ட வங்கியில் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 இல் அக்கணக்கின் மிகுதி ரூபா 1,953,157 ஆக இருந்தது. | இப்பணம் இந்தக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு இலங்கை வங்கியில் பேணப்பட்டு வருகின்ற ஹோமியோபதி நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட பணமாக வைப்புச் செய்வதற்கு புதிய மருத்துவச் சபை அமைச்சுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. | பொது வியாபாரச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 1,179,379 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 141,689 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,557,690 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டதுடன், இப்பின்னடைவிற்கு பதவியணியினரின் சம்பளம் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் அதிகரித்தமை பிரதானமான காரணங்களாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹோதியோபதி மருத்துவத் துறையில் ஈடுபடுவதை மேம்படுத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் கண்காணித்தல், ஹோமியோபதி மருத்துவ முறைமைகள் தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், மேம்படுத்தல், மருத்துப் பொருட்கள் மற்றும் ஏனைய மருத்துப் பொருட்களை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளிப்பதை மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகிய பிரதான நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வைத்திய சபையின் அனைத்து திட்டங்களும் வைத்திய சபையின் முன்மொழிவின் அடிப்படையில் ஒழுங்கமைப்படுகின்றமையால் வைத்திய சபையினை நியமிக்கப்பட்டிராமை வருடாந்த திட்டத்தினை தயாரிக்காமைக்கான காரணமாக அமைந்திருந்தமை மற்றும் 2020 செப்தெம்பர் 09 ஆந் திகதி நியமிக்கப்பட்ட புதிய வைத்திய சபையினால் எதிர்வரும் வருடங்களுக்காக திட்டங்கள் தயாரிக்கப்படும். | ஹோமியோபதி வைத்திய சபை அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு இயலுமான வகையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டியமை. |

### 3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொதுமக்களிடம் பணம் சேகரிப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்ட எவ்வித ஏற்பாடொன்றும் இல்லாது மற்றும் முறையான அங்கீகாரமின்றி ''ஹோமியோபதி நிதியம்'' பெயரில் ஒன்று ரூபா 5,000 பெறுமதியான உதவிப் பத்திரப் புத்தகங்கள், அச்சிடப்பட்டிருந்தன. அச்சிடப்பட்ட ஆண்டு, அச்சிடப்பட்ட மொத்த உதவிப் பத்திரங்களின் எண்ணிக்கை, உதவிப் பத்திரங்களின் விற்பனை வருமானம் மற்றும் அப் பணம் வங்கியிலிடப்பட்டமை தொடர்பான தகவல்கள் எதுவும் சபையிடம் காணப்படவில்லை. மிகக் குறைந்த புத்தக எண் மற்றும் அதிகமான புத்தக எண் என்பவற்றுக்கிடையே 159 புத்தகங்கள் பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் சேகரிக்கப்பட முடியுமாகவிருந்த மொத்தப் பணம் ரூபா 795,000 ஆகும். அவற்றுள் 416 புத்தகங்களின் இருப்பொன்று மிகுதியாகக் காணப்பட்டதுடன் அந்த உதவிப் பத்திரப் புத்தகங்களை இரத்துச் செய்வதற்கோ அல்லது அகற்றப்பட்டு நீக்குவதற்கான நடவடிக்கைகள் 2021 யூலை 15 வரையில் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2009 ஒக்டோபர் மாதத்தில் அப்போதைய விடயப் பரப்பு மாண்புமிகு அமைச்சரினால் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கலைக்கப்பட்ட மருத்துவச் சபையினால் அச்சிடப்பட்ட இந்தப் உதவிப் பத்திரப்புத்தகங்கள் தொடர்பான முடிவுகள், மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் விடயங்களை உள்ளடக்கிய கோவைகள் எதுவும் மருத்துவச் சபையிடம் காணப்படவில்லை என்பதைப் பதிவாளர் தெரிவித்துள்ளதுடன் இது தொடர்பாக விசாரிக்கப்பட்டு விடயங்கள் தொடர்பான கருத்துரைகளை வழங்குவதற்கு முடியாதென்றும் மற்றும் இந்த உதவிப் புத்தகங்களை அழிப்பதற்கு எதிர்காலத்தில் அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படுமென கருத்துரை வழங்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக முறையான விதத்தில் நடவடிக்கை எடுத்து இந்த உதவிப் பத்திரப் புத்தக இருப்பினை நீக்க வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியொன்றை ஆரம்பிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது கட்டிடமொன்றை நிர்மாணித்து, 2009 ஆம் ஆண்டின் போது | 2009 ஆம் வருடத்திற்கு பின்னர் வைத்திய சபை செயற்படாத காரணத்தினால் அதற்கான தீர்வொன்று கிடைக்கவில்லை என்பதுடன் புதிய வைத்தியச் சபையினால் இது தொடர்பாக கண்டறியப்பட்டு மருத்துவக் கல்லூரியை | நிர்மாணிக்கப் பட்டுள்ள கட்டிடம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்டுள்ள உபகரணங்களை உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| ரூபா 1,199,254 செலவிடப்பட்டு அதற்காக தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் கற்கைப் பணிகளை ஆரம்பிப்பதற்குரிய சட்டரீதியான சட்டகத்தினை தயாரிப்பதற்காக உரிய நடைமுறைகள் முன்னெடுக்கப்படாத காரணத்தினால் 2021 யூலை 15 ஆந் திகதி வரையிலும் கற்கைப் பணிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் மற்றும் அதற்குரிய கட்டிடமொன்று 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | ஆரம்பிப்பதற்கான சட்டபூர்வ பின் தொடரல் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததாகவும் மற்றும் எதிர்காலத்தில் அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் உபகரணங்களை உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது. | துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வைத்திய சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 48 ஆன போதிலும் உள்ளபடியான பதவியணி 37 ஆகும். சபைக்கு அத்தியாவசியமான பதவியொன்றான இரு மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் 08 மருந்து கலப்பவர்களின் வெற்றிடத்தினை நிரப்புவதற்கு 2021 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 யூலை 12 ஆந் திகதி நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் மருந்து கலப்பவர்களை ஆட்சேர்ப்பதற்காகப் பொருத்தமான NVQ Level 3 தரத்துடனான கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு தற்போது TVEC நிறுவனத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் மற்றும் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் மருந்து கலப்பவர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |